திரு. ஏ. சி. நரசிம்மன் : கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலைகளுக்கு பங்குத்தொகை வசூலிப்பதில் நீண்டகால தாமதம் ஆகிறது. ஆகவே தனியாக ஷுகர் கார்ப்பரேஷன் என்று ஆரம்பித்து, அரசாங்கமே பங்குத்தொகை போட்டு, அந்தச் சர்க்கரை ஆலைகளை வெகுவிரைவில் ஆரம்பிக்க, வேண்டிய முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது ஒரு நல்ல யோசனை. கூட்டுறவுத் துறையில் கண்டிஷன் போடுவார்கள். கூட்டுறவுத் துறையில் அவர் பணியாற்றியிருக்கிற காரணத்தினால் அதன் சிரமங்களை உணர்ந்து சொல்கிறார். அரசாங்கமே ஏராளமான முதல் போடவேண்டுமென்றால் தனியார்களுக்குக் கொடுப்பதைப்போல தமக்கும் கொடுக்க வேண்டும். அவர்கள் பொதுமக்களிடத்தில் நிதி திரட்டிக்கொள்வதைப்போல, அரசாங்கமும் பொதுத்துறையில் நிதி திரட்டி போடுவதற்கு மத்திய அரசு அனுமதிக்கவேண்டும் என்கிற அடிப்படையில் நம்முடைய சார்பில் சொல்லியிருக்கிறோம். கோவை மாவட்டத்தில் ஆரம்பிக்கிற சர்க்கரை ஆலையை அப்படி மாற்றலாமா என்பது யோசனை. எப்படி ஆரம்பித்தாலும் கரும்பு தருகிற விவசாயிகள் பங்கு இருந்தால்தான் சர்க்கரை ஆலைகள் நல்லமுறையில் நடைபெற முடியும்.

Production of plywood.

* 255 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to start a factory for the production of Plywood in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

நாங்குநேரி வட்டத்தில் முன்சீப் நீதிமன்றம்

* 256 வினா.—திரு. வீ. கார்த்திசன் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், நாங்குநேரி வட்டத்தில், புதிதாக முன்சீப் கோர்ட் ஒன்று ஏற்படுத்த முடிவு எடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது எங்கு அமைக்கப்படும் ?